செ.வெ.எண்.43 நாள்:18.08.2020

# நீலகிரி மாவட்டம் கோத்தகிரி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சார்பில் ரூ.1.50 கோடி மதிப்பில் முடிக்கப்பட்ட பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா,இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

---

நீலகிரி மாவட்டம் கோத்தகிரி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சார்பில் முடிக்கப்பட்ட வளர்ச்சி திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா,இ.ஆ.ப., அவர்கள் இன்று (18.08.2020) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

முதலாவதாக கோத்தகிரி ஊராட்சி ஒன்றியம் நடுஹட்டி ஊராட்சிக்குட்பட்ட நடுஹட்டி கிராமத்தில் ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் நிதி திட்டத்தின் கீழ் ரூ.15.84 இலட்சம் மதிப்பில் முடிக்கப்பட்ட சிமெண்ட் கான்கிரீட் சாலை பணிகளையும், பெத்தளா ஊராட்சிக்குட்பட்ட பெத்தளாவில் ரூ.11.85 இலட்சம் மதிப்பில் முடிக்கப்பட்ட சிமெண்ட் கான்கிரீட் சாலை பணிகளையும், நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.91.21 இலட்சம் மதிப்பில் கொணவக்கரை ஊராட்சிக்குட்பட்ட அட்டடியில் முடிக்கப்பட்ட சிமெண்ட் கான்கிரீட் சாலை பணிகளையும், 14 நிதி குழு மானிய திட்டத்தின் கீழ் ரூ.14.42 இலட்சம் மதிப்பில் முல்லை நகர் முதல் இம்பியாடாமட்டம் வரை முடிக்கப்பட்ட சாலை பணிகளையும், கொணவக்கரை எவில் தேயிலை தோட்டம் வரை ரூ.5.75 இலட்சம் மதிப்பில் முடிக்கப்பட்ட சிமெண்ட் கான்கிரீட் சாலை பணிகளையும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.2.25 இலட்சம் மதிப்பில் மரக்கன்றுகள் நடும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

அதனை தொடர்ந்து கொணவக்கரை ஊராட்சிக்குட்பட்ட கொட்டக்கொம்பை பகுதியில் ரூ.10.00 இலட்சம் மதிப்பில் முடிக்கப்பட்ட தடுப்புச்சுவருடன் கூடிய நடைபாதை பணிகளையும் என மொத்தம் ரூ.1.50 கோடி மதிப்பில் முடிக்கப்பட்ட வளர்ச்சி திட்ட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மேலும் ஐக்கனாரை ஊராட்சிக்குட்பட்ட வள்ளுவர் நகர் காலனி பகுதியில் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.70.00 இலட்சம் மதிப்பில் நடைபெற்று வரும் தடுப்புச்சுவர் கட்டும் பணிகள், கழிவுநீர் ஓடை அமைக்கும் பணிகள் உள்ளிட்ட வளர்ச்சி திட்ட பணிகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து பணிகளை தரமாகவும், விரைவாகவும் முடித்திட அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா,இ.ஆ.ப., அவர்கள் உத்தரவிட்டார்.

பின்னர் சாலையோரமுள்ள முட்புதர்களை அகற்றி தடுப்பு சுவர்களை மேம்படுத்தி தரமான சாலைகளை அமைக்க வேண்டும் எனவும், கிராம சாலைகளில் பெயர் பலகைகளை வைக்குமாறும், பழுதடைந்துள்ள தடுப்புச்சுவர்களை உடனடியாக சரி செய்யுமாறும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும் பொதுமக்கள் குப்பைகளை ஓடைகளில் கொட்டாமல் குப்பை தொட்டிகளில் கொட்டி, தாங்கள் வசிக்கும் பகுதிகளை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் வைத்துள்ளனரா என அலுவலர்கள் மற்றும் ஊராட்சி தலைவர்கள் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது குன்னூர் சார் ஆட்சியர் திரு.ரஞ்சித்சிங்,இ.ஆப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.கெட்சி லீமா அமாலினி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை உதவி செயற்பொறியாளர் திருமதி.ஜெகன்நாரா, கோத்தகிரி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.நந்தகுமார், திரு.ஜெயபாலன், கொணவக்கரை ஊராட்சி தலைவர் திருமதி.ஜெயபிரியா, துணை தலைவர் திரு.பிரவீன் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்.